# தூய ஆரோக்கிய அண்ணை திருவிழா




**06**

**DAY**

## தூய ஆரோக்கிய அன்னை திருச்சபையின் தாயும் சாயலும்

# தூய ஆரோக்கிய அன்னை திருச்சபையின்

# தாயும் சாயலும்



2 கொரி. 5:17-18
17எனவே ஒருவர் கிறிஸ்துவோடு இணைந்திருக்கும்போது அவர் புதிதாகப் படைக்கப்பட்டவராய் இருக்கிறார். பழையன கழிந்து புதியன புகுந்தன அன்றோ! 18இவை யாவும் கடவுளின் செயலே. அவரே கிறிஸ்துவின் வாயிலாக நம்மைத் தம்மோடு ஒப்புரவாக்கினார்; ஒப்புரவாக்கும் திருப்பணியையும் நமக்குத் தந்துள்ளார்.

## அன்பில் இணைவோம்

குரு: ஆண்டவருடைய மீட்பை அறிவியுங்கள்
அவருடைய அரும்பெரும்செயல்களை எடுத்தியம்புங்கள்

Priest : Announce the salvation of the Lord
Proclaim his works among the people

மக்: என்றென்றும் உள்ளது அவரது இரக்கம்

People: His mercy is everlasting

குரு: இறைவார்த்தையால் இவ்வுலகை ஒளிர்வித்த
இறைவனை நாம் வாழ்த்துவோம்.

Priest : Bless the Lord our God
Who sent the Word of life into the World

மக்: ஆண்டவர் தம் செயல்களில் நீதியுள்ளவர்
அவருடைய செயல்கள் புனிதமானவை
அனைத்துலகே ஆண்டவரைப் புகழ்வாயாக
உயிருள்ள அனைத்தும் அவரின் திருநாமத்தை வாழ்த்துவதாக

People: Just is the Lord in all His ways
And Holy in all His works
Let every creature praise Him
and all living beings bless his name

## புகழ்வோம் நம் அன்னையை

தாயே உன் பாத மலரினிலே
என்றும் வாடாத மலராக நானிருப்பேன்
தாய் என்னை மறந்தாலும் நீ மட்டும் நாளும்
சேயாக அணைக்கின்ற தாய்மரி நீயே
கல்வாரி மலைமீது எமக்காக உறவாய்
கனிவோடு வந்தாயே தாய் என்ற நினைவாய்
கடலினும் பெரியது உன் உள்ளம் அம்மா
கடுகினும் சிறிய என் துயர்தீர்ப்பாய்
துன்பத்தின் ஆழத்தைக் கண்டவர் நீயே
துன்புற்றபோதும் துவளாத தாயே
வாழ்க்கையின் விதிமுறை எமக்குரைத்தாயே
வாவென பார்வையில் எமை அழைத்தாயே

## திருப்பாடலில் செபிப்போம் .திபா. 86:1—17

1ஆண்டவரே! எனக்குச் செவிசாய்த்துப் பதிலளியும்:
ஏனெனில், நான் எளியவன்:` வறியவன்.
2என் உயிரைக் காத்தருளும்:
ஏனெனில், நான் உம்மீது பற்றுடையவன்:
உம் ஊழியனைக் காத்தருளும்:
நீரே என் கடவுள்! நான் உம்மீது நம்பிக்கை கொண்டுள்ளேன்.

3என் தலைவரே! என் மேல் இரக்கமாயிரும்:
ஏனெனில், நான் முழுவதும் உம்மை நோக்கி மன்றாடுகின்றேன்.
4உம் அடியானின் மனத்தை மகிழச் செய்யும்: என் தலைவரே!
உம்மை நோக்கி என் உள்ளத்தை உயர்த்துகின்றேன்.

5ஏனெனில், என்` தலைவரே! நீர் நல்லவர்: மன்னிப்பவர்:
உம்மை நோக்கி மன்றாடும் அனைவருக்கும் பேரன்பு காட்டுபவர்.
6ஆண்டவரே, என் வேண்டுதலுக்குச் செவிகொடும்:
உம் உதவியை நாடும் என் குரலைக் கேட்டருளும்.

7என் துன்ப நாளில் உம்மை நோக்கி மன்றாடுகின்றேன்:
நீரும் எனக்குப் பதிலளிப்பீர்.
8என் தலைவரே! தெய்வங்களுள் உமக்கு நிகரானவர் எவருமில்லை.
உமது செயல்களுக்கு ஒப்பானவை எவையுமில்லை.

9என் தலைவரே! நீர் படைத்த மக்களினத்தார் அனைவரும்
உம் திருமுன் வந்து உம்மைப் பணிவர்: உமது பெயருக்கு மாட்சி அளிப்பர்.
10ஏனெனில், நீர் மாட்சி மிக்கவர்:
வியத்தகு செயல்கள் புரிபவர்: நீர் ஒருவரே கடவுள்!

11ஆண்டவரே, உமது உண்மைக்கேற்ப நான் நடக்குமாறு

உமது வழியை எனக்குக் கற்பியும்.
உமது பெயருக்கு அஞ்சுமாறு என் உள்ளத்தை ஒருமுகப்படுத்தும்.
12என் தலைவரே! என் கடவுளே!
என் முழு இதயத்தோடு உம்மைப் புகழ்வேன்:
என்றென்றும் உமது பெயருக்கு மாட்சி அளிப்பேன்.
13ஏனெனில், நீர் என்மீது காட்டிய அன்பு பெரிது!
ஆழமிகு பாதாளத்தினின்று என்னுயிரை விடுவித்தீர்!

14கடவுளே1 செருக்குற்றோர் எனக்கெதிராய் எழுந்துள்ளனர்:
கொடியோர் கூட்டம் என் உயிரைப் பறிக்கப் பார்க்கின்றது:
அவர்களுக்கு உம்மைப்பற்றிய நினைவே இல்லை.
15என் தலைவரே! நீரோ இரக்கமிகு இறைவன்:
அருள் மிகுந்தவர்: விரைவில் சினமுறாதவர்:
பேரன்பும் உண்மையும் பெரிதும் கொண்டவர்.

16என்னைக் கண்ணோக்கி என்மீது இரங்கும்:
உம் அடியானுக்கு உம் ஆற்றலைத் தாரும்:
உம் அடியாளின் மகனைக் காப்பாற்றும்.

17நன்மைத்தனத்தின் அடையாளம் ஒன்றை எனக்கு அருளும்:
என் எதிரிகள் அதைக் கண்டு நாணுவர்:
ஏனெனில், ஆண்டவராகிய நீர்தாமே
எனக்குத் துணைசெய்து ஆறுதல் அளித்துள்ளீர்.

## Psalm - 86:1-17

1 Incline your ear, O LORD, and answer me,
for I am poor and needy.
2 Preserve my life, for I am devoted to you;
save your servant who trusts in you.
You are my God; 3 be gracious to me, O Lord,
for to you do I cry all day long.
4 Gladden the soul of your servant,
for to you, O Lord, I lift up my soul.
5 For you, O Lord, are good and forgiving,
abounding in steadfast love to all who call on you.
6 Give ear, O LORD, to my prayer;
listen to my cry of supplication.
7 In the day of my trouble I call on you,
for you will answer me.

8 There is none like you among the gods, O Lord,
nor are there any works like yours.
9 All the nations you have made shall come
and bow down before you, O Lord,

and shall glorify your name.
10 For you are great and do wondrous things;
you alone are God.
11 Teach me your way, O LORD,
that I may walk in your truth;
give me an undivided heart to revere your name.
12 I give thanks to you, O Lord my God, with my whole heart,
and I will glorify your name forever.
13 For great is your steadfast love toward me;
you have delivered my soul from the depths of Sheol.

14 O God, the insolent rise up against me;
a band of ruffians seeks my life,
and they do not set you before them.
15 But you, O Lord, are a God merciful and gracious,
slow to anger and abounding in steadfast love and faithfulness.
16 Turn to me and be gracious to me;
give your strength to your servant;
save the child of your serving girl.
17 Show me a sign of your favor,
so that those who hate me may see it and be put to shame,
because you, LORD, have helped me and comforted me.

## செவிமடுப்போம் இறைவார்த்தைக்கு

**புனித யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்: யோவா. 2:1-11**

1மூன்றாம் நாள் கலிலேயாவில் உள்ள கானாவில் திருமணம் ஒன்று நடைபெற்றது.
இயேசுவின் தாயும் அங்கு இருந்தார். 2இயேசுவும் அவருடைய சீடரும்
அத்திருமணத்திற்கு அழைப்புப் பெற்றிருந்தனர். 3திருமண விழாவில் திராட்சை இரசம்
தீர்ந்து போகவே இயேசுவின் தாய் அவரை நோக்கி இயேசுவின் தாய் அவரை
நோக்கி, 'திராட்சை இரசம் தீர்ந்துவிட்டது' என்றார். 4இயேசு அவரிடம், 'அம்மா,
அதைப்பற்றி நாம் என்ன செய்யமுடியும்? எனது நேரம் இன்னும் வரவில்லையே' என்றார்.
5இயேசுவின் தாய் பணியாளரிடம், 'அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்'
என்றார். 6யூ தரின் தூய்மைச் சடங்குகளுக்குத் தேவையான ஆறு கல்தொட்டிகள்
அங்கே இருந்தன. அவை ஒவ்வொன்றும் இரண்டு மூன்று குடம் தண்ணீர்கொள்ளும்.
7இயேசு அவர்களிடம், 'இத்தொட்டிகளில் தண்ணீர் நிரப்புங்கள்' என்று கூறினார்.
அவர்கள் அவற்றை விளிம்பு வரை நிரப்பினார்கள். 8பின்பு அவர், 'இப்போது மொண்டு
பந்தி மேற்பார்வையாளரிடம் கொண்டு போங்கள்' என்று அவர்களிடம் கூறினார். அவர்-
களும் அவ்வாறே செய்தார்கள். 9பந்தி மேற்பார்வையாளர் திராட்சை இரசமாய் மாறியிருந்த
தண்ணீரைச் சுவைத்தார். அந்த இரசம் எங்கிருந்து வந்தது என்று அவருக்குத்
தெரியவில்லை: தண்ணீர் மொண்டு வந்த பணியாளருக்கே தெரிந்திருந்தது. ஆகையால்
பந்தி மேற்பார்வையாளர் மணமகனைக் கூப்பிட்டு, 10எல்லாரும் நல்ல திராட்சை இரசத்தை
முதலில் பரிமாறுவர்: யாவரும் விருப்பம் போலக் குடித்தபின்தான் தரம் குறை-

றந்த இரசத்தைப் பரிமாறுவர். நீர் நல்ல இரசத்தை இதுவரை பரிமாறாமல் ஏன்
வைத்திருந்தீர்?˙ என்று கேட்டார். [11]இதுவே இயேசு செய்த முதல் அரும் அடையாளம்.
இது கலிலேயாவில் உள்ள கானாவில் நிகழ்ந்தது. இதன் வழியாக அவர் தம் மாட்சியை
வெளிப்படுத்தினார். அவருடைய சீடரும் அவரிடம் நம்பிக்கை கொண்டனர். [12]இதன்
பிறகு அவரும் அவர் தாயும் சகோதரர்களையும் அவருடைய சீடரும் கப்பர்நாகும்
சென்று அங்குச் சில நாள்கள் தங்கியிருந்தனர்.

இது கிறிஸ்துவின் வாழ்வு தரும் நற்செய்தி
கிறிஸ்துவே உமக்குப் புகழ்..

Jn:2:1-12

[1]On the third day there was a wedding in Cana of Galilee, and the mother of Jesus
was there. [2] Jesus and his disciples had also been invited to the wedding. [3] When the
wine gave out, the mother of Jesus said to him, “They have no wine.” [4] And Jesus
said to her, “Woman, what concern is that to you and to me? My hour has not yet
come.” [5] His mother said to the servants, “Do whatever he tells you.” [6] Now stand-
ing there were six stone water jars for the Jewish rites of purification, each holding
twenty or thirty gallons. [7] Jesus said to them, “Fill the jars with water.” And they
filled them up to the brim. [8] He said to them, “Now draw some out, and take it to
the chief steward.” So they took it. [9] When the steward tasted the water that had
become wine, and did not know where it came from (though the servants who had
drawn the water knew), the steward called the bridegroom [10] and said to him,
“Everyone serves the good wine first, and then the inferior wine after the guests
have become drunk. But you have kept the good wine until now.” [11] Jesus did this,
the first of his signs, in Cana of Galilee, and revealed his glory; and his disciples be-
lieved in him. [12] After this he went down to Capernaum with his mother, his broth-
ers, and his disciples; and they remained there a few days.

## இறை வார்த்தையை உள்ளத்தில் இருத்தி சிந்திப்போம்...

## நம் உள்ளத்தில் எழும் மன்றாட்டுக்களை நம் ஆரோக்கிய அன்னை வழியில் அன்பர் இயேசுவிடம் சமர்ப்பிப்போம்.

*1. அன்னையாம் திருச்சபைக்காக மன்றாடுவோம்: தாய் திருச்சபையை வழிநடத்தும் நமது திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள் குருக்கள் மற்றும் இறைமக்கள் நமது அன்னை மரியாவைப் போல ஆவியின் வரங்களால் நிரப்பட்டு ஒற்றுமையின் கருவிகளாகத் திகழ்ந்திட ஆண்டவரே அன்னை மரியா வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.*

**இறைவா! புனித ஆரோக்கிய அன்னை வழியாக நாங்கள் கேட்கும் மன்றாட்டுக்குச் செவிசாய்த்தருளும்.**

*2. நமது தளத்திருச்சபைக்காக மன்றாடுவோம்.: நமது தலைமை ஆயர் மற்றும் இனையாயர்கள் நமது உயர் மறைமாவட்டதில் உள்ளஒவ்வொரு குடும்பங்களிலும் இறைவார்த்தையின் ஒளி மகிழ்சியிலும் மனநிறைவிலும் ஒற்றுமையிலும் வாழ்ந்திட வளர்ந்திட ஆண்டவரே அன்னயையாம் மரியாள்*

வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

**இறைவா! புனித ஆரோக்கிய அன்னை வழியாக நாங்கள் கேட்கும் மன்றாட்டுக்குச் செவிசாய்த்தருளும்.**

3. அமெரிக்கா வாழ் இந்தியர்களுக்காக அவர்களின் குடும்பங்களுக்காக மன்றாடுவோம். அன்பிலும் மகிழ்ச்சியிலும் ஒன்றுபட்டு வாழ்ந்திடவும் ஒரு-வரையொருவர் மன்னித்து ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தை தந்திட ஆண்டவரே அன்னை மரியாவழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

**இறைவா! புனித ஆரோக்கிய அன்னை வழியாக நாங்கள் கேட்கும் மன்றாட்டுக்குச் செவிசாய்த்தருளும்.**

4. புனித ஆரோக்கிய அன்னையின் பத்தர்கள் அனைவருக்காகவும் மன்றாடுவோம்: அன்னையைப்போல பிறரன்பிலும் இறையன்பிலும் நாளுக்கு நாள் வாழ்ந்து நற்செய்திக்குச் சான்றுபகர்ந்திட அருள்வேண்டி ஆண்டவரே அன்னை மரியா வழியாக ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

**இறைவா! புனித ஆரோக்கிய அன்னை வழியாக நாங்கள் கேட்கும் மன்றாட்டுக்குச் செவிசாய்த்தருளும்.**

5. நமது தனிப்பட்ட தேவைகளுக்காக ....

.....ஆண்டவரே அன்னை மரியா வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

**இறைவா! புனித ஆரோக்கிய அன்னை வழியாக நாங்கள் கேட்கும் மன்றாட்டுக்குச் செவிசாய்த்தருளும்.**

# புனித ஆரோக்கிய அன்னை நவநாள் செபம்

மகா பரிசுத்த கன்னிகையே! இயேசுவின் தாயாராயிருக்குமாறு
பரிசுத்த மூவொரு கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்ட தூய கன்னி மரியே!
கடவுளுடைய திருப்புதல்வர் உமது திருஉதரத்தில்
மனிதராக அவதரித்தபோதும் ஒன்பது மாதமளவாக
அவரை உமது மாசணுகாத கருவில் தாங்கியபோதும்
நீா் அடைந்த பேரின்பத்தை உமது ஊழியர்களாகிய நாங்கள்
நினைவுகூர அருள்கூர்ந்தமைக்கு உமக்கு நன்றிகூறுகின்றோம்.
எமது அன்பினாலும் தூய வாழ்வினாலும்
நீா் அடைந்த பேரின்பத்தை நாங்களும் அடைய
எங்களுக்காக மன்றாடும் தாயே!
துன்பப்படுவோரின் தாயே இரக்கமிக்க அன்னையே!
நீா் அனுபவித்த பேரின்பத்தைக் கொண்டாடுகின்றவர்களுக்கு
நீா் வாக்களித்துள்ள விசேச உதவியையும் பாதுகாப்பையும்

எங்களுக்கு இவ்வேளையில் பெற்றுத்தந்தருளும்.
கேளுங்கள் கொடுக்கப்படும் என்ற உம் திருமகன் இயேசுகிறிஸ்துவின்
வல்லமைமிக்க வார்த்தையில் நம்பிக்கைகொண்டு
உமது வல்லமைமிக்க மன்றாட்டுகளில் நம்பிக்கைகொண்டு
இந்த நவநாட்களில் நாங்கள் செய்யும் விண்ணப்பங்களை
கடவுளுடைய திருவுளத்திற்கு மாறாயிருந்தால்
எமக்கு எவ்வரம் மிகவும் தேவையோ அவற்றை பெற்றுத்தந்தருளும்.

(இங்கு மன்றாட்டுக்களை நினைவிற்கொள்ளவும்)

இறைவனின் தாயே! இப்பொழுது உமக்கு வணக்கமாக
நாங்கள் செய்யும் இந்த நவநாளை உம்மில்கொண்டிருக்கும்
ஆழ்ந்த நம்பிக்கையின்பொருட்டு செய்கிறோம்.
இயேசு மனிதராக அவதரித்தபோது
உமது திருவுளம் அடைந்த தெய்வீக மகிழ்ச்சியை
அதற்கு வணக்கமாக நாங்கள் செய்யும் இந்நவநாள் பக்தி முயற்சியையும்
இப்பொழுது நாங்கள் சொல்லப்போகும்
அருள் நிறைந்த செபத்தையும் அன்போடு ஏற்றுக்கொள்ளும் தாயே!

(9 முறை அருள் நிறைந்த செபம்)

நீர் அணிந்திருக்கும் மணிமுடியில்
எம் செபங்கள் அத்தனையும் விண்மீண்களென துலங்குமென
ஆழ்ந்த நம்பிக்கைகொள்கின்றென்.
வருந்துவோருக்கு ஆறுதலே!
எம் வேளைநகர் ஆரோக்கியத் தாயே!
நாங்கள் உம்மிடம் மன்றாடும் விண்ணப்பங்கள் நிறைவேறுமாறு
உமக்கு வணக்கமாக இதுவரை புனிதர்களால் செய்யப்பட்ட
எல்லா அரும்பெரும் நிகழ்வுகளையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன்.
உமது திருமகனும் எங்கள் ஆண்டவருமான
இயேசு கிறிஸ்துவின் திருஇருதயத்தில் பொங்கி வழியும் பேரன்பையும்
அதுபோன்ற உமது அன்பையும் நினைவிற்கொண்டு
உமது அடியோர்களாகிய எங்களது செபத்தை ஏற்று
எம் மன்றாட்டுகளை அடைந்து தந்தருளும் அம்மா. ஆமென்.

## இறையாசீர்

## ஆண்டவரில் அக்களிக்கும் நம் ஆரோக்கிய அன்னையை வாழ்த்துவோம்.

ஆரோக்கிய மாதாவே –உமது
புகழ்பாடித் துதித்திடுவோம்
எந்நாளும் பாடித்துதித்திடுவோம்.

அலைகள்மோதிடும் கடற்கரைதன்னில்
வசித்திட ஆசை வைத்தாயே
பலவகை கலைகளும் பாரினில் துலங்கிட

அனைவருக்கும் துணைபுரிந்தாயே - 2

தேன் கமழும் சோலை சூழ்ந்து விளங்கும்
வேளாங்கண்ணியில் அமர்ந்தாயே
வானகமும் இந்த வையகமும்
செழித்தோங்கிட அருள் புரிந்தாயே

## செபிப்போமாக

ஆண்டவரே பரிசுத்த தந்தையே
மாசுமருவற்ற தூய கன்னிமரியாள்
தம் இதயத்தில் உமது வார்த்தையை ஏற்று
தம் திருவயிற்றில் கருத்தரித்து
மீட்பரை ஈன்றெடுத்து பேனிவளர்த்தது போலவே
திருச்பையும் தொடக்கத்தில் பேனிவளர்த்தாள்.
இறைவனின் ஒப்பற்ற அன்பினை ஏற்றவளாய்
சிலுவையின் அடியில் விசுவாச உறுதியோடு நின்று
எங்கள் அனைவரின் தாயாகி
தம் திருமகனின் இறப்பால் எங்கள் அனைவர்க்கும்
புதுவாழ்வினைப் பெற்றுத்தந்தாள்.
தம் திருமகனின் சீடர்களோடு செபத்தில் ஒன்னிணைந்து
உமது தூய ஆவியின் வருகையை எதிர்கொண்டு
உம் தூய திருச்சபைக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தாள்.
உமது வின்னக மகிமை விளங்கிட
மீட்பரின் இரண்டாவது வருகைவரை
நாங்கள் அவரின் தாய்மைப்பாசத்தில் வளந்து
இறைஇயேசுவின் பணியில் வளர்திட எம் அன்னைவழியாக
உம்மை மன்றாடுகின்றோம்.

